# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1569/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சண்முகம் | த-பெ | பெரிய கருப்பன் |
| ஊர்: | : | கூத்தலூர் | | |
| வயது: | : | 58/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசாரி | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் கூத்தலூரில் வசித்து ஆசாரி வேலை செய்து வருகிறேன். அசா1 எனது அண்ணன் மகன். கடந்த 26.05.2022 அன்று அசா1 மைக்கேல் என்பவருடன் இருசக்கர வாகனத்தில் வீட்டில் இருந்து கிளம்பி வேலைக்காக காரைக்குடிக்கு சென்றார்கள். வேலையை முடித்துவிட்டு வரும் வழியில் உள்ள பள்ளிக்கு அருகில் உள்ள சாலையில் கார் ஒன்று அவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும் அதனால் காயம்பட்டு அவர்கள் சிகிச்சைக்காக காரைக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிந்து கொண்டு அங்கு சென்று பார்த்தபோது அசா1 க்கு தலை, கால் மற்றும் கை ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. மைக்கேல் என்பவரை மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதித்திருந்தார்கள். வழக்கு சமயத்தில் போலீசார் விசாரணை செய்தார்கள். அவர்களிடம் மேற்படி விபரங்களை நான் சொன்னேன்.

குறுக்கு விசாரணை

நான் முதல் விசாரணையில் சொன்ன அனைத்து விபரங்கள் கேள்விபட்டது தான் நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்பது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.13 16:26:14 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1569/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கணேசன் | த-பெ | அழகப்பன் |
| ஊர்: | : | கூத்தலூர் | | |
| வயது: | : | 35/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வெல்டிங் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.03.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் கூத்தலூரில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 26.05.2022 அன்று எங்கள் ஊரில் திருவிழா நடைபெற்றது. மதியம் 3.30 மணியளவில் மானகிரி பிரதான சாலையில் உள்ள டீக் கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன். அப்போது மேற்படி பிரதான சாலையில் விபத்து ஒன்று ஏற்பட்டதாக தகவல் வந்தது. சூரக்குடி மருத்துவமனை திருமயம் சாலையில் சென்று பார்த்தபோது விபத்து ஏற்பட்டிருந்தது. சம்பவ சாலையில் கார் மற்றும் இருசக்கர வாகனம் விபத்திற்குள்ளாகியிருந்தது. இதற்கிடையில் இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்திருந்தார்கள். சம்பவ சாலையில் கார் ஒன்று இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் இரண்டு நபர்கள் காயம் பட்டு அவர்கள் சுய நினைவு இன்றி இருந்தார்கள். அவர்களை 108 ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். ஆட்கள் நிறைய இருந்தார்கள். கூச்சலாக இருந்தது. அங்கிருந்தவர்கள் காரின் ஓட்டுநரை காண்பித்தார்கள். அதன் அடிப்படையில் நான் அவரை பார்த்தேன். போலீசார் சம்பவ சமயத்தில் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி கார் ஓட்டி விபத்தை ஏற்படுத்திய நபரை பார்த்தால் அடையாளம் காண்பிப்பேன். எதிரி ஆஜர் ஆகாத காரணத்தால் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.13 10:26:19 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1569/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பெரியசாமி | த-பெ | அழகப்பன் |
| ஊர்: | : | கூத்தலூர் | | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசாரி | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் கூத்தலூரில் வசித்து ஆசாரியாக வேலை செய்து வருகிறேன். கடந்த 26.05.2022 அன்று நானும் எனது நண்பர் மைக்கேல் என்பவரும் Splendor plus இருசக்கர வாகனத்தில் வேலையை காரைக்குடியில் முடித்துவிட்டு திருச்சி - இராமேஸ்வரம் பிரதான சாலையில் மாலை 4.00 மணியளவில் சென்று கொண்டிருந்தோம். மேற்படி இருசக்கர வாகனத்தின் பதிவெண் Tn 63 AZ 1265 ஆகும். மேற்படி வாகனம் என்னுடையது தான். வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சம்பவ சாலையின் இடது புறமாக நாங்கள் சென்று கொண்டிருந்தோம். மேற்படி வாகனத்தை எனது நண்பர் மைக்கேல் என்பவர் ஓட்டினார். நான் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருந்தோம். ராஜா வித்யா விகாஸ் பள்ளி அருகில் நாங்கள் சென்று கொண்டிருந்தபோது எதிர் திசையில் வந்த வெள்ளை நிற கார் ஒன்று அதிவேகமாக குறுக்கே வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதியது. மேற்படி சம்பவத்தில் எனக்கு தலை, கால், வயிறு ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டது. மேற்படி எனது நண்பர் மைக்கேல் என்பவருக்கு கை, தலை, கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டது. காயம்பட்ட எங்கள் இருவரையும் 108 ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

2. மைக்கேல் என்பவரை மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள் பரிந்துரை செய்தார்கள். இந்த விபத்தில் காயம்பட்ட நான் மதுரை அரசு மருத்துவமனையில் சுமார் 6 மாதம் சிகிச்சையில் இருந்தேன். அதற்கு முன்பு நான் காரைக்குடி சண்முகவேல் தனியார் மருத்துவமனையில் 15 நாட்கள் கால அளவில் இரண்டு மாத காலம்

சிகிச்சையில் இருந்தேன். பலன் இல்லாத காரணத்தால் மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். காரைக்குடி அரசு மருத்துவமனையில் நான் சிசிக்சையில் இருந்தபோது குன்றக்குடி போலீசார் விசாரணை செய்தார்கள். மேற்படி கார் ஓட்டி விபத்தை ஏற்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்குமாறு நான் புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1.** மேற்படி கார் ஓட்டி விபத்தை ஏற்படுத்திய நபரை பார்த்தால் அடையாளம் காண்பிப்பேன். எதிரி ஆஜர் ஆகாத காரணத்தால் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.13 10:26:26 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.